**<u>STARTING TIME 11.44 A.M</u>**

**<u>IN THE COURT OF THE SPECIAL SUBORDINATE JUDGE (LAOP CASES), ARAKKONAM.</u>**

**<u>O.S. No. 207/2019</u>**

Deposition of **<u>D.W.1</u>** witnesses for Plaintiff Solemnly affirmed by Tr. R. Suresh Babu, Grade-III Bench Clerk of this court, on 24.07.2025 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : **செல்வம்** Father's Name :

Address :

Calling : Age :

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நான் இவ்வழக்கின் 1–ம் பிரதிவாதியின் கணவர் என்றால், சரிதான். இவ்வழக்கின் 6–ம் பிரதிவாதி எனது 3–வது மகள் என்றால், சரிதான். இவ்வழக்கின் வாதியின் தாயாரான கமலாம்மாள் என்பவர் எனது உடன்பிறந்த சகோதரி என்றால், சரிதான். எனது மனைவியான 1–ம் பிரதிவாதிக்கு மூட்டு அறுவை சிகிச்சை செய்து உடல்நலம் சரியில்லாத காரணத்தால் நான் அவருக்கு பதிலாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரிதான்.

2. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.6 மருத்துவ அறிக்கையானது 2023–ம் ஆண்டு வழங்கப்பட்டது என்றால், சரிதான். தற்போதும் எனது மனைவி உடல் நலம் சரியில்லாமல் உள்ளார் என்பதற்கான மருத்துவ ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். எனது மனைவி தற்போது நல்ல உடல் நலத்துடன் தான் உள்ளார் என்றும், அவர் நீதிமன்றம் வந்தால் உண்மையை சொல்லிவிடுவார் என்பதால் அவருக்கு பதிலாக நான் சாட்சியம் அளிக்கிறேன்

என்றால், சரியல்ல.

3. எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள நீதி போரானைகள் சம்மந்ததப்பட்ட உத்தரவுகளை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. எனது பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 18, 19–ல் சொல்லியுள்ள அசல் வழக்கு எண் 24/1995–க்கான ஆவணங்கள் எதையும் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான்.

4. தாவா சொத்தின் ஒரு பகுதியை வாதியின் தாயாரிடமிருந்து 1–ம் பிரதிவாதி எப்போது கிரயம் வாங்கினார் என்றால், 1992–ம் ஆண்டு வாங்கினார். எவ்வளவு விஸ்தீரண சொத்தை 1–ம் பிரதிவாதி கிரயம் பெற்றார் என்றால், 21 செண்ட் கிரயம் பெற்றார். கிரயம் வாங்கிய போது, செண்டு ஒன்று ரூ.10,000–ம் மதிப்பு இருக்கும் என்றால், சந்தை மதிப்பு பற்றி தெரியவில்லை.

5. 1–ம் பிரதிவாதி கிரயம் பெற்ற 21 செண்ட் அமைந்துள்ள எல்லைக்குள் தான் வாதி 8.65 செண்டில் கட்டியுள்ள கட்டிடங்களும் அமைந்துள்ளது என்றால், சரியல்ல. வாதியின் தாயாரான கமலம்மாளுக்கு, அவரது பெற்றோரிடமிருந்து சேர வேண்டிய சொத்துக்களின் விவரம் வாதிக்கும், பிரதிவாதிகளுக்கும் தெரியாது என்றால், சரியல்ல, தெரியும்.

6. கமலம்மாளுக்கு, அவரது பெற்றோரிடமிருந்து சேர வேண்டிய சொத்துக்கள் உள்ளது என்றும், அதை இவ்வழக்கில் சேர்க்கவில்லை என்றும், 1–ம் பிரதிவாதியின் பதிலுரையிலோ அல்லது எனது பிரமாண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால், சரிதான். இவ்வழக்கின் 2 மற்றும் 3–ம் பிரதிவாதிகள், அவர்களது தாயார் உயிருடன் இருந்த போது அரசுப் பணியில் இருந்தார்கள் என்றால், சரிதான். 1985–ம் ஆண்டே 2–ம் பிரதிவாதி அரசுப் பணியில் இருந்தார் என்றால், சரிதான்.

7. கீதா மற்றும் குப்பன் என்பவர்களை வாதி அனுபவித்திற்கு விட்டுள்ளதாக சொல்லும் இடம் 1–ம் பிரதிவாதி கிரயம் பெற்ற 21 செண்டில் உள்ளதா அல்லது

மீதி உள்ள 21 செண்டில் உள்ளதா என்றால், ஒரு பகுதி 1–ம் பிரதிவாதி கிரயம் பெற்ற சொத்தில் உள்ளது. 1–ம் பிரதிவாதியின் இடத்தில் இருந்த ஆக்கிரமிப்பையும் சேர்த்து அகற்ற வேண்டி 1–ம் பிரதிவாதியின் தாயாரான கமலம்மாள் 1994–ம் ஆண்டு நடவடிக்கை எடுத்ததாக எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால், சொல்லியுள்ளேன்.

8. 1–ம் பிரதிவாதியின் பெயரில் பெற்ற கிரயம் உண்மையானதாக இருந்தால் அவ்விடத்தில் உள்ள ஆக்கிரமிப்பினை அகற்ற கமலம்மாள் நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்றும், அந்த கிரயம் பெயரளவில் எழுதப்பட்டதால் தான் ஆக்கிரமிப்பை அகற்ற கமலம்மாள் நடவடிக்கை எடுத்தார் என்றால், சரியல்ல.

9. எனது பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 15–ல் ஆக்கிரமிப்பினை அகற்ற வெவ்வேறு அரசு துறை அதிகாரிகளுக்கு மனு கொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றால், சரிதான். 1–ம் பிரதிவாதியின் பதிலுரையிலும், எனது பிரமாண வாக்குமூலத்திலும் ஆக்கிரமிப்பு எந்த இடத்தில் செய்துள்ளார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால், சரியல்ல, சொல்லியுள்ளேன். அது போல் பிரமாண வாக்குமூலத்தில் எந்த இடத்தில் சொல்லியுள்ளேன் என்றால், அது பற்றி தெரியவில்லை. நான் அது போல் ஆக்கிரமிப்பு எந்த இடத்தில் உள்ளது என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால், சரியல்ல.

10. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.3, பி.வா.சா.ஆ.4 பட்டாவில் 1–ம் பிரதிவாதி மற்றும் அவரது தங்கைகளான 4, 5 பிரதிவாதிகள் பெயர் கூட்டாக உள்ளது என்றால், சரிதான். 1–ம் பிரதிவாதியின் பெயரில் பெற்றதாக சொல்லும் கிரயம் உண்மையானதாக இருந்திருந்தால், 1–ம் பிரதிவாதியின் பெயரில் உட்பிரிவு செய்து தனிப்பட்டா பெற்றிருப்பார் என்றும், பெயரவில் எழுதப்பட்ட கிரயம் என்பதால் தான் தனிப்பட்டா வாங்கிக் கொள்ளவில்லை என்றால், சரியல்ல.

11. கீதா மற்றும் குப்பன் என்பவர்கள் செய்துள்ளதாக சொல்லும்

ஆக்கிரமிப்பினை அகற்ற வேண்டி நீதிமன்றத்தில் வழக்கு எதுவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால், 2017–ம் ஆண்டு மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் நீதி போராணை மனு தாக்கல் செய்திருந்தோம். அந்த நீதி போராணை மனுவில் இவ்வழக்கின் வாதி மற்றும் 4, 5 பிரதிவாதிகளை தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால், சரிதான்.

12. 1–ம் பிரதிவாதியின் பெயரில் கிரயம் பெற்ற 21 செண்டில் கீதா மற்றும் குப்பன் என்பவர்கள் ஆக்கிரமிப்பு செய்துள்ள இடம் இருப்பதால் தான் அவர்கள் மீது மட்டும் நீதி போராணை மனு தாக்கல் செய்யப்பட்டது என்றும், மீதி உள்ள 21 செண்டில் எந்த ஆக்கிரமிப்பும் இல்லை என்பதால் தான் மற்றவர்களை தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால், சரியல்ல. 1–ம் பிரதிவாதியின் பெயரில் கிரயம் பெற்ற 21 செண்டில் கீதா மற்றும் குப்பன் என்பவர்கள் செய்துள்ள ஆக்கிரமிப்பு இடம் பெற்றுள்ளது பற்றி தெரிந்துவிடும் என்பதால் தான் மேற்படி நீதி போராணை மனுவின் உத்தரவை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல.

13. வாதியின் அனுமதியின் பேரில் தான் கீதா மற்றும் குப்பன் வசித்து வந்தார்கள் என்றால், சரிதான்.

வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேண்டுகோளின் பேரில் ஒத்தி வைக்கப்படுகிறது.

**ENDING TIME 12.25 P.M.**

YUVARAJ

Digitally signed by YUVARAJ
Date: 2025.07.24 14:25:42 +0530